[29th April 1959

Children's Theatre

*260 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை கவர்ன்மெண்டு எஸ்டேட்டில் பழைய அசெம்பிளி கட்டிடத்தில் நிறுவப்பட்டிருக்கும் குழந்தைகள் சினிமா தியேட்டருக்காக வும், சினிமா சம்பந்தப்பட்ட கருவிகள் இதர சாமான்களுக்காகவும் செலவி டப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) 1958-ம் வருட கடைசி வரைக்கும் இந்த சினிமா தியேட்டரில் எத்தனை படங்கள் காட்டப்பட்டன ?

(இ) எத்தனை நாட்கள் படங்கள் காட்டப்பட்டன ?

(ஈ) வசூலான தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM:

(அ) ரூ. 73,291·53.
(ஆ) 68 படங்கள்.
(இ) 72 நாட்கள்.
(ஈ) ரூ. 3,470·79.

SRI P. G. MANICKAM: சினிமா தியேட்டரில் காட்டப்பட்ட படங்கள் யாரால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன? நமது அரசாங்கம் எத்தனை படங்கள் தயாரித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: நாம் தனியாக படம் தயாரிக்கவில்லை. மற்றவர்கள் தயாரிக்கும் படங்களை எடுத்துக் காட்டுகிறோம்; 68 படங்கள் சென்ற ஆண்டில் காட்டப்பட்டிருக்கின்றன.

SRI A. VEDARATHNAM: இந்தப் படங்களை, மொபஸலிலே இதர ஜில்லாக்களிலுள்ள இளம் சிறார்களுக்கும் பலன் கிடைக்கும்படியாகச் செய்து, மற்ற இடங்களுக்கும் அனுப்ப அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது சென்னை நகரில் ஏற்பட்டிருக்கும் அனுபவத்தை வைத்துக்கொண்டு, ஜில்லாப் பிரதேசங் களுக்கும் இதை விஸ்தரிப்பதற்கும் முயற்சி செய்யப்படும்.

SRI V. SANKARAN: குழந்தைகளுக்கான படங்களைக் குழந்தைகள் மட்டும்தான் பார்க்கவேண்டுமா ? பெரியவர்கள் பார்க்க வேண்டு மென்றால், அவர்களும் அனுமதிக்கப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: பெரியவர்களும் அனுமதிக்கப் படுகிறார்கள். அவர்கள் இரட்டை சார்ஜ் கட்டவேண்டும்.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION *RE* ALLEGED DEVIOUS TACTICS OF THE MANAGEMENT OF THE INDIAN EXPRESS NEWSPAPERS, LIMITED, AND CONSEQUENT LABOUR UNREST.

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from the hon. Member, Sri K. Sattanatha Karayalar, to discuss a definite matter of urgent public importance, viz., the serious impasse created by the devious tactics of the management of the Indian Express Newspapers, Ltd., and the consequent labour unrest, while is assuming alarming proportion.